1981 ஏப்ரல் 25]

திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறார்கள். வந்துபோகின்ற பயணிகளுக்கு ஏற்ப அமைகின்ற திட்டம், அதற்காக கொடுத்திருக்கிறோம், அதற்காக மாற்று இடம் அவர்கள் கொடுக்கவில்லை. அதற்காகப் பணம் பெற்றுக்கொண்டோம்.

தர்மபுரியில் குழந்தைகள் கலையரங்கம் கட்டும் திட்டம்

*வினா எண். 879—திரு. எஸ். அரங்கநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி நகரில் குழந்தைகள் கலையரங்கம் ஒன்று கட்டும் செயல் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆமெனில், எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இந்த வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, தர்மபுரி நகரத்திலே குழந்தைகள் கலையரங்கம் வேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே முடிவெடுக்கப்பட்டு வளர்ச்சிக் குழுவிலேயும் எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. அரசாங்கம் பரிசீலனை செய்வதாக ஏற்கெனவே சொல்லப் பட்டிருக்கிறது. ஆகவே, அதனைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்து கலையரங்கம் ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, தற்பொழுது பரிசீலனையிலே இல்லை ; பின்னாலே எடுத்துக்கொள்ளலாம்.

நாப்பாளையத்தில் மேம்பாலம் கட்டும் பணி

*வினா எண். 880—திரு. ஆர். சக்கரபாணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம் பொன்னேரி தொகுதி மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த நாப்பாளையம் (பொன்னேரி நெடுஞ்சாலை) மேம்பாலம் பணி எப்போது துவக்கப்பட்டது ?

(ஆ) அம்மேம்பால வேலை பாதி தூண்கள் வரை கட்டப்பட்டு நிற்பதற்கான காரணம் என்ன ?

(இ) அது எப்போது முடிவுபெறும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) 8—12—1975.